மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளை அதை எடுத்துக் கொள்ள இருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் விதிப்படி பேச வேண்டும். (குறுக்கீடு) உட்காருங்கள். என்னுடைய அறையிலே வந்து பேசுங்கள்.

முற்பகல் 11–10.

5. அறிவிப்புகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாற்றுத் தலைவர்கள் பட்டியல். சட்டமன்ற பேரவை விதிகளின் 9 (1)-வது விதியின் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் நான்காவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன் :

(1) திரு. ம. சின்னசாமி

(2) திரு. வ. சத்தியமூர்த்தி

(3) திரு. ஆர். சிங்காரம்

(4) திரு. வே. தம்புசாமி

(5) திரு. நா.சா. பழனிசாமி

6. கண்டனம்.

அவை உரிமை மீறலுக்காக ''முரசொலி'' ஆசிரியர் திரு. எஸ். செல்வம் அவர்களுக்குக் கண்டனம் தெரிவித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் உரிமையை மீறியதற்காகக் கண்டனம்.

பேரவையின் உரிமையை மீறியதற்காக ஒருவர் கண்டிக்கப் படுகிறபோது அவையின் இறையாண்மையையும், மாண்பையும் உணர்த்திடும் வகையில் தண்டனை நிறைவேற்றப்படும் வரையில், தண்டனையின் முக்கியத்துவத்தைக் கருதி, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் துளியும் சத்தமின்றி அமைதி காக்க வேண்டும்.

மார்ஷல், பத்திரிகை ஆசிரியர் திரு. செல்வம் ஆஜராகி உள்ளாரா ?

(மார்ஷல் : ஆம் ஐயா, ஆஜராகி உள்ளார்.)

திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர்.